DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 7 of 2015**

Deposition of P.W. 1 (L.W. 1 ) } Prosecution } Defence }

Name of the Witness : திரு.ரங்கநாதன்

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemanly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 24.01.2025

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் வேப்பமரத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். எனது மனைவி பெயர் ரோஜா. எனக்கு ஒரு மகன், ஒரு மகள். எனது மகன், மகள் இருவருக்கும் திருமணமாகி விட்டது. எனது மகன்

செந்தில் டிப்ளமோ படித்து லாரி டிரைவராக இருக்கிறார். எதிரிகளை எனக்கு தெரியும். அண்ணன், தம்பி உறவுமுறை. என்னுடைய நிலமும், எதிரிகளுடைய நிலமும் அருகே அருகே உள்ளது. அதில் கோபால் தேக்கு செடி கீழே உள்ளது. என்னுடைய நிலம் மேலே உள்ளது. தேக்கு செடியை மேல் பகுதியான என்னுடைய நிலத்தில் நட்டார்கள். அதை நான் பிடுங்கி விட்டேன். அதனால் அவருக்கும் எனக்கும் சிறிய சண்டை இருந்து கொண்டு வந்தது.

2) 4.12.2013 மாலை 4, 4.30 மணிக்கு நான் யசோதா கடையில் நின்று பேசி கொண்டிருந்த போது போலிஸ் அதிகாரிகள் வந்திருந்தார்கள். சுரேஷ் சுதா என்ற ஆதி திராவிடர் பெண்ணை திருமணம் செய்து கொண்டிருந்தார். நான் வந்தவுடன் ஏன் முன்பாகவே வரவில்லை என்று கேட்டார்கள். சுரேசும் சுதாவும் என்னால் தான் ஊரில் பிரச்சனை என்றும் சுதா கல்லில் வாயிலும், சுரேஸ் கட்டையால் முன்னந்தலையில் அடித்தார். பின்னர் என் மகன், மருமகளும் வந்தார்கள். சுரேஸ் கத்தியால் மேல் உதடு, கீழ் உதட்டில் அடித்தார். எனது உதடு கிழிந்து விட்டது. நான் போட்டிருந்த மேல் பல் செட்டும், கீழ் பல்செட்டும் வந்து விட்டது. பிறகு ஊர்காரர்கள் எல்லாம் வந்து விட்டார்கள். 108க்கு போன் செய்து பூமாணிக்கம் என்பவர் என்னை தருமபுரி அரசு மருத்துவமனையில் என்னை கொண்டு போய் சேர்ந்தார்.

(ஆவணம் குறியீடு செய்ய வேண்டி முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)